# பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள்: கல்குடா கல்வி வலய 1AB பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**R.Thakshaayini**
Department of Education and Childcare
Faculty of Arts and Culture
Eastern University, Sri Lanka
*thakshaa8184@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்:** அறிவைப் பெறக்கற்றல், பெற்ற அறிவினை காலத்திற்குகாலம் இற்றைப்படுத்திக் கொள்ளல், பொருத்தமாகக் கையளித்தல் என்பன இந்த நூற்றாண்டின் கல்வி தொடர்பான முக்கிய விடயங்களாகும். இவற்றினை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களுக்கே உண்டு. பாடசாலைமட்ட ஆசிரியர் அபிவிருத்தி என்பது (School Based Teacher Development-SBTD) மாணவரின் அடைவு மட்ட உயர்வு மற்றும் ஆளுமை விருத்திக்கு வழிகாட்டக்கூடிய பொறுப்பு மிக்க ஆசிரியர்களை உருவாக்குவதற்காகப் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தித் தேவையை இனங்காணல், திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் ஆகிய செயற்பாடுகளைக் கொண்ட தொடர்ச்சியான வேலைத்திட்டமாகும். தற்போது பாடசாலைகளினால் தயாரிக்கப்படும் ஐந்தாண்டுத்திட்டத்தில் ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கான (SBTD) வரைவு காணப்படுகின்றது. ளுடீவுனுசெயற்பாட்டிற்காக அமைச்சு, மாகாணம், வலயமட்டம் என்பவற்றிலிருந்து நிதி ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே அதனைப் பாடசாலையானது கட்டாயம் செயற்படுத்த வேண்டியுள்ளது. அத்திட்டத்திற்காக ஆசிரியர்களுக்கான வேலைத்திட்டத்தினை இனங்காணல், திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் என்பன உள்ளடக்கியதாக ளுடீவுனு செயற்படுத்தப்படல் அவசியமானதாகும். ளுடீவுனு தொடர்பான தெளிவை அதிபர் ஆசிரியர்களிடையே ஏற்படுத்தல் இன்றியமையாததாகிறது. அத்துடன் ளுடீவுனுயினை பாடசாலையில் செயற்படுத்தும் போது பல்வேறு சவால்களை எதிர் கொள்ளவேண்டியுள்ளது. இச் சவால்களை எதிர் கொண்டு ளுடீவுனுயை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தல் அவசியமாகும். மேலும் தற்காலத்தில் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபங்கள், பிரமாணங்கள் ஊடாக ளுடீவுனு கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டிய ஒன்றாக காணப்படுகின்றது. ஆசிரியர் அபிவிருத்தி தொடர்பான தேவையுடையவர்களுக்கும் பயனுடையதாக அமையும் என்பதால் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வினைத் திறம்பட மேற்கொள்வதற்காக ஆய்வு நோக்கங்கள் தீர்மானிக்கப்பட்டு அவற்றை அடைந்துகொள்ளும் விதமாக வினாக்கொத்து, நேர்முகங்காணல் போன்ற தரவு சேகரித்தற் கருவிகள் தயாரிக்கபட்டு அவை தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளுக்கு வழங்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டு அவை பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்**: அறிவுசார்சமூகம், இற்றைப்படுத்தல், வேலைத்திட்டம், பாடசாலைமட்ட ஆசிரியர் அபிவிருத்தி

## 1. ஆய்வு அறிமுகம்

பாடசாலைமட்ட ஆசிரியர் அபிவிருத்தி (School Based Teacher Development-SBTD) SBTD என்பது மாணவரின் அடைவு மட்ட உயர்வு மற்றும் ஆளுமை விருத்திக்கு வழிகாட்டக்கூடிய பொறுப்பு மிக்க ஆசிரியர்களை உருவாக்குவதற்காகப் பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தித் தேவையை இனங்காணல், திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் ஆகிய செயற்பாடுகளை கொண்ட தொடர்சியான வேலைத்திட்டமாகும்.

மாறிவருகின்ற உலகிற்கேற்ப ஆசிரியர்களும் தங்களை மாற்றிக் கொள்ளவேண்டும். எனவே ஆசிரியர்கள் முறையாகத் தங்களை விருத்தி செய்துகொள்வது அவசியம். அதனூடாக மாணவர்களைக் கவர்ந்து ஆர்வத்தை ஏற்படுத்துதலும், மாணவர்களின் அடைவுமட்டத்தை அதிகரித்தலும், காலத்தின் தேவைக்கு ஏற்றவாறு பொருத்தமான கல்வியை மாணவர்களுக்கு வழங்குதலும் இலகு.

தற்போது பாடசாலைகளினால் தயாரிக்கப்படும் ஐந்தாண்டுத்திட்டத்தில் ஆசிரியர் அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கான (SBTD) வரைவு காணப்படுகின்றது. SBTD செயற்பாட்டிற்காக அமைச்சு, மாகாணம், வலயமட்டம் என்பவற்றிலிருந்து நிதி ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே அதனைப் பாடசாலையானது கட்டாயம் செயற்படுத்த வேண்டியுள்ளது. அத்திட்டத்திற்காக ஆசிரியர்களுக்கான வேலைத்திட்டத்தினை இனங்காணல், திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் என்பன உள்ளடக்கியதாக SBTD செயற்படுத்தப்படல் அவசியமானதாகும்.

SBTD தொடர்பான தெளிவை அதிபர் ஆசிரியர்களிடையே ஏற்படுத்தல் இன்றியமையாததாகிறது. அத்துடன் SBTDயினை பாடசாலையில் செயற்படுத்தும் போது பல்வேறு சவால்களை எதிர் கொள்ளவேண்டியுள்ளது. இச் சவால்களை எதிர் கொண்டு SBTDயைத் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தல் அவசியமாகும். மேலும் தற்காலத்தில் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபங்கள், பிரமாணங்கள் ஊடாக SBTDயை கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டிய ஒன்றாக காணப்படுகின்றது. எனவே இது தொடர்பாக பரந்த அறிவையும், தெளிவையும் பெற்றுக் கொள்வதற்கும், ஆசிரியர் அபிவிருத்தி தொடர்பான தேவையுடையவர்களுக்கும் பயனுடையதாக அமையும் என்பதால் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆய்வு பிரதேசத்தில் SBTD தொடர்பாக இது வரை எவ்வித ஆய்வுகளும் செய்யப்படவில்லை. எனவே அப்பிரதேசத்தில் SBTD பற்றிய ஆய்வு இப் பிரதேசத்தில் இனிவரும் காலங்களில் SBTD யை வினைத்திறன் மற்றும் விளைதிறன் மிக்கதாக செயற்படுத்துவதற்கு இவ்வாய்வு களமாக அமையும்.

## 1.2 ஆய்வு பிரச்சினைகள்

- SBTD செயற்றிட்டம் பற்றிய பூரண விளக்கமின்மையாலும், போதிய தெளிவின்மையாலும் இச் செயற்றிட்டங்களை முழுமையாக திட்டமிட்டு நடைமுறைப்படுத்த முடியாதுள்ளது. இதனால் பாடசாலையினை பயன்தரு தன்மைக்கு இட்டுச் செல்ல முடியாதுள்ளது.
- அதிபர் தமது பாடசாலை ஆசிரியர்களிற்கு அவசியமான SBTD செயற்பாடுகளை பகுப்பாய்வு மூலம் தெரிவு செய்யாமல் தனது விருப்பத்திற்கு ஏற்ப ஆசிரியர்களிற்கு பொருத்தமற்றதும் சரியாக இனங்காணப்படாததுமான செயற்பாடுகளை திட்டமிடுதல் காரணமாக சரியான இலக்கினை அடையமுடியாதுள்ளது.
- பாடசாலை முகாமைத்துவக் குழுவினருக்குத் திட்டமிடல் செயற்பாடு, நடைமுறைப்படுத்தல் என்பவற்றில் போதியவு திறன்கள் காணப்படாதிருக்கின்றமையும். அப்படி இருந்த போதிலும் அதனை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்ற நிலையும் காணப்படுகின்றது.
- உரிய பாடமல்லாத ஆசிரியர் அப்பாடத்தினை கற்பிக்க நிர்பந்திக்கப்படல் காரணமாக ஆசிரிர்களின் ஒத்துழைப்பு கிடைக்காமை.
- நீண்ட காலம் ஒரே பாடசாலையில் கற்பித்தல் ஆசிரிர்களின் சுய கற்றலில் ஆசியர்கள் விருப்பமின்மை
- பாடசாலைகளில் அதிபர், ஆசிரியர்களிடையே காணப்படும் முரண்பாடுகள் காரணமாக SBTD செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாமை.

➢ திட்டமிடலில் நிறுவனம்சார் ஒழுங்கமைப்பு காணப்படாமை.

### 1.2 ஆய்வு நோக்கங்கள்

- SBTD தொடர்பாக அதிபர், ஆசிரியர்களின் மனநிலையை அறிதல்.
- SBTD இன் அவசியத்தை அதிபர், ஆசிரியர்கள் உணர்ந்துள்ளனரா என்பதை அறிதல்.
- SBTD இல் அதிபர்களின் வகிபாகம் எத்தகையது என்பதை இனங்காணல்.
- பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி செயற்றிட்டத்தினை (SBTD) சிறப்பாக நடைமுறைப்படுத்துவதில் பாடசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காணல்.
- பிரச்சினைகளை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான வழிவகைகளையும் தீர்வுகளையும் முன்வைத்தல்.

## 2. ஆய்வு முறையியல்

**2.1 அளவைநிலை ஆய்வு:** விபரண ஆய்வு முறைகளில் ஒன்றான அளவை நிலை ஆய்வுமுறை இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது தற்கால உண்மை நிலைகளை ஆராய்ந்து சரியான தகவல்களை அளிக்கும் விமர்சன ரீதியான முறையாக அமைவதால் ஓர் அளவை நிலை ஆய்வு முறையாகவே உள்ளது.

**2.2 தரவு சேகரிப்பு முறைகள்:** இவ் ஆய்வுக்குத் தேவையான தரவுகள் வினாக்கொத்து, நேர்காணல், அவதானித்தல், ஆவணங்கள், உள்ளக மேற்பார்வைப் படிவங்கள், ஆசிரியர் மதிப்பீட்டுப் படிவங்கள், பாடசாலைத் தொகை மதிப்பு ஆசிரிய விபரப் படிவங்கள், என்பன பயன்படுத்திப் பெறப்பட்டுள்ளன.

**2.3 மாதிரித் தெரிவு:** பெருந்தொகை மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் அதிலிருந்து வரையறுத்து தெரிவு செய்து அம்மக்களின் பிரதிநிதிகளைப் பயன்படுத்தி அவர்களைக் கொண்டு ஆய்வு செய்து ஆய்வுக் கருத்துக்களை அறிதலே மாதிரி எடுத்தல் எனப்படும்.

இவ் ஆய்விற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா கல்வி வலயத்திலுள்ள 1AB பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

### 2.3.1 பாடசாலைகளின் விபரம்

| **இல** | **பாடசாலையின் பெயர்** | **மாணவர்களின் எண்ணிக்கை** | **ஆசிரியர்களின் எண்ணிக்கை** | **அதிபர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|---|---|
| 01 | மட்/கல்/வாழைச்சேனை இந்துக்கல்லூரி | 1576 | 69 | 01 |
| 02 | மட்/கல்/பேத்தாழை விபுலானந்தா வித்தியாலயம் | 663 | 38 | 01 |
| 03 | மட்/கல்/செங்கலடி மத்திய கல்லூரி | 2251 | 98 | 01 |
| 04 | மட்/கல்/வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம | 1994 | 82 | 01 |

| | | | | |
|---|---|---|---|---|
| 05 | மட்/கல்/வந்தாறுமூலை விஷ்ணு மகா வித்தியாலயம் | 1660 | 72 | 01 |
| | **மொத்தம்** | **8144** | **359** | **05** |


**அட்டவணை** 1 (மூலம்: கல்குடா வலயக் கல்வித் திணைக்களம்)

கல்குடா கல்வி வலயத்தில் மொத்தமாக 83 பாடசாலைகள் காணப்படுகின்ற போதிலும் ஆய்வினைச் சரியான முறையில் செய்வதனைக் கருத்திற் கொண்டும் கல்குடா வலயத்திலுள்ள 1AB பாடசாலைகள் ஐந்தும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் ஆய்வு நோக்கக்குழுவாக அதிபர், ஆசிரியர்களே காணப்படுவதால் இவ் ஐந்து பாடசாலைகளிலுமுள்ள 5 அதிபர்கள் மற்றும் மொத்தமாக 359 ஆசிரியர்களும் மாதிரிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

### 3. தரவுகளின் பகுப்பாய்வும் வியாக்கியானிப்பும்

ஆய்வுக்கெனப் பெறப்படும் எண் வடிவிலோ அல்லது பிற குறியீட்டு வடிவங்களிலோ அமைந்த தகவல்கள் தரவுகள் எனப்படும். சேகரிக்கப்பட்ட தரவுகளிலிருந்து அவதானிக்கப்பட்ட பல்வேறு சாராம்சங்களின் அடிப்படையில் பெறப்பட்ட கூற்றுக்களைக் கொண்டு ஒரு தனிப்பட்ட ஆய்வு என்னென்ன அம்சங்களை அல்லது விடயங்களைச் சுட்டி நிற்கின்றது என்பதை வெளிக்காட்டுவது தரவுப் பகுப்பாய்வு ஆகும்.
இவ் ஆய்வின் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு இடம்பெற்றுள்ளது.

### 3.1 SBTD இன் அவசியத்தை அதிபர், ஆசிரியர்கள் உணர்ந்துள்ளனரா என்பதை அறிதல்.





*வரைபடம் 1*

இவற்றினைத் தொகுத்துப் பார்க்கின்ற போது 69.0% ஆனவர்கள் தற்போதைய நிலையில் ஆசிரியர்களிற்கு SBTD அவசியம் என்ற மனநிலையில் காணப்படுவதுடன், 11.9% ஆனவர்கள் தற்போதைய நிலையில் ஆசிரியர்களிற்கு SBTD அவசியம் இல்லை என்ற மனநிலையுடன் காணப்படுவதனை பதிவுகளிலிருந்து அறிய முடிகிறது. ஆன போதிலும் தற்காலத்தில் ஆசிரியர் அபிவிருத்தியில் மரபு சார்ந்த முறைகளிற்குப் பதிலாக பாடசாலையை தளமாகக் கொண்ட ஆசிரியர் அபிவிருத்தி பெரிதும் விதந்துரைக்கப்படுகின்றது. எனவே அதிபரானவர் இக் கருத்தினை ஏற்றுக் கொள்ளாதவர்களின் 11.9% ஆனவர்கள் தொடர்பாக அதிபர் மேற்பார்வை செய்வது முக்கியமானதாகும். உண்மையிலே அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளாவிட்டால் எவ்வாறு


மாற்றங்களை உள்வாங்கி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் செயற்பட முடியும். எனவே இவர்கள் தொடர்பாக அதிபர் கவனமெடுக்க வேண்டும். மேலும் 19% நடுநிலை வகிக்கின்றேன் என்று கூறியுள்ளனர் இவர்களும் SBTD தொடர்பான பூரண விளக்கமில்லாத நிலையில் காணப்படுபவர்களாகவே இருப்பர். இவர்களிற்கு அதிபர், சக ஆசிரியர்கள் போன்றோர் SBTD தொடர்பாக விளங்கங்கள் அளிக்கப்படவேண்டும்.

### 3.2 SBTD இல் அதிபர்களின் வகிபாகம் எத்தகையது என்பதை இனங்காணல்.




*வரைபடம் 2*

### 3.3 பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்திச் செயற்றிட்டத்தினைச் (SBTD) சிறப்பாக நடைமுறைப்படுத்துவதில் பாடசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காணல்.




*வரைபடம் 3*

## 4 கண்டுபிடிப்புக்கள்

- ஆசிரியர்கள் SBTD செயற்றிட்டம் அவசியமானது எனக்கருதினாலும் அதனை நடைமுறைப்படுத்துவதில் விருப்பமின்மை.
- அதிபரின் கட்டாயத்தின் பேரில் விருப்பமின்றி செயலமர்வுகளில் ஆசிரியர்கள் கலந்து கொள்ளுதல்
- தகுதியற்ற வளவாளர்களைக் கொண்டு செயலமர்வுகள் நடத்தப்படலும் வினைத்திறனற்ற செயலமர்வுகளாகவும் காணப்படல்.

- ஆசிரியர்கள் SBTD செயற்றிட்டம் தொடர்பாக பூரணமான அறிவும் விளக்கமும் கொண்டிருக்கவில்லை.
- ஆசிரியர்கள் சுயமாக SBTD செயற்றிட்டம் தொடர்பாக அறிவும் விளக்கமும் பெறுவதற்கான வாய்புக்கள் பாடசாலைகளில் காணப்படாமை
- அதிபர் ஆசிரியர்களிடையே பாடசாலையில் பாரபட்சம் காட்டுதல்
- SBTD தொடர்பாக அதிபர்கள் பாடசாலைக்குத் தெரியப்படுத்தாமை
- ஆசிரியர்கள் தங்களின் நியமன பாடவகைக்கும் கற்பிக்கும் பாடத்திற்கும் பொருத்தமற்று காணப்படுவதால் செயலமர்வுகளிற்கு ஒத்துழைக்காத நிலை காணப்படுதல்.
- வலயமட்டத்தில் உரிய காலத்தில் SBTD செயற்றிட்டம் தொடர்பாகத் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்யப்படுவதில்லை
- ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதனால் பயிற்சிகளுக்கு ஆசிரியர்களை அனுப்ப முடியாது எனக் கூறியதன் மூலம் SBDT இன் உண்மையான செயற்பாடு பற்றி அதிபருக்கு விளக்கமில்லாத நிலை காணப்படுதல்
- SBTD செயற்றிட்டத்தினை நடைமுறைப்படுத்துவதில் அதிபர்கள் உரிய வகிபங்கை வகிக்கவில்லை.
- ஆசிரியர்களின் ஒத்துழைப்பு இன்மை
- திட்டமிடல் தொடர்பான அறிவின்மை
- ஐந்தாண்டு திட்டமிடலில் உள்ளடக்கப்படும் SBTD செயற்றிட்டங்கள் பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.
- சமூகங்களின் பாடசாலையுடனான நலிவான தொடர்பு
- வலயம் ஆசிரியர்களிற்கு எதிரான நடவடிக்கை எடுக்காத நிலை

## 5 விதந்துரைப்புக்கள்

- பொருத்தமான விடயங்களிற்குப் பொருத்தமானவர்களைச் செயற்றிட்டங்களில் பங்குபெற்ற செய்ய வேண்டும்
- செயற்றிட்டங்களை நடத்தும் வளவாளர்கள் பொருத்தமான கல்வி, தொழில்தகைமைகளைக் கொண்டவராகவும் குறித்த துறையில் வாண்மைத்துவம் பெற்றவர்களாக இருப்பவர்களை தெரிவு செய்தல் வேண்டும்
- கல்வி அமைச்சினால் SBTD செயற்றிட்டங்களுக்கு வளவாளர்களாகப் பெயர் குறிப்பிடப்பட்டவர்களை கட்டாயமாக தெரிவு செய்தல்.
- அதிபர், பிரதி அதிபர் போன்றோர் SBTD தொடர்பான சுற்று நிருபங்கள், வழிகாட்டல் கைநூல் என்பவற்றை உரிய வேளையில் ஆசிரியர்கள் அறிந்து கொள்வதற்கான ஏற்பாடுகளை செய்தல் வேண்டும்
- அதிபர்கள் தங்களின் சொந்த உணர்வுகளிற்கு இடம் கொடுக்காது கல்வியின் பொது நோக்கை அடிப்படையாக கொண்டு செயற்பட வேண்டும்.
- பாடசாலையில் நிர்வாக வேலைகளில் பங்குபற்றும் ஆசிரியர்கள், மற்றும் கற்பித்தல் வேலைகளில் ஈடுபடும் ஆசிரியர்கள் என்போருக்கு சமமான வேலைப்பகிர்வுகள் கொடுக்கப்பட வேண்டும்.

- பாடசாலையின் திட்டமிடல் செயற்பாடுகளில் ஆசிரியர்களின் பங்களிப்பையும் ஈடுபாட்டினையும் பெற்றுக் கொள்வதற்கான செயற்பாடுகளை அதிபர் செயற்படுத்த வேண்டும்.
- SBTD செயற்றிட்டம் தொடர்பாக நேரான விளக்கங்களை பாடசாலையில் காட்சிப்படுத்தல்.
- காலத்திற்கு காலம் கோட்டமட்டம், வலய மட்டம் என்பவற்றினால் SBTD தொடர்பாக மேற்பார்வை செய்தல்.
- பாடசாலையின் விருத்திக்குச் சமூகத்தின் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ளுதல்.
- SBTD தொடர்பாக சரியான விளக்கத்தினைப் பெறவைத்தல் வேண்டும்
- முதலாம், இரண்டாம் தவணைகளுக்குள் SBTD தொடர்பான பயிற்சிகளைத் திட்மிட்டு வலயம் நடத்த வேண்டும்.
- அடிக்கடி புதிய விடயங்கள் நிர்வாகச் செயற்பாட்டில் உட்புகுத்த வேண்டியுள்ளதால் அதிபர்கள் தொடர்ச்சியாகப் புதிய விடயங்களைக் கற்றுக் கொள்வதற்கான சந்தர்பங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
- அதிபர்கள் SBTD செயற்றிட்டங்களில் பங்குபற்றாத ஆசிரியர்கள் தொடர்பான ஆற்றுகை பற்றி மதிப்பீடுகளை மேற்கொண்டு பின்னூட்டல்களை வழங்குதல்.

**உசாத்துணைகள்**


1. கருணாநிதி.மா 2008 "கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள்" சேமமடு புத்தகசாலை, பீப்பள்ஸ்பார்க், கொழும்பு 11
2. கோகிலன்.ஏ.கே 2003 "தமிழ்மொழி மூலம் தகவல் தொழில்நுட்பம்" சிவகோவசி வெளியீட்டகம், திருகோணமலை.
3. சந்திரசேகரன். சோ 1995 "புதியநூற்றாண்டுக்கான கல்வி" தர்ஸனா வெளியீட்டகம், கொழும்பு 06.
4. சந்திரசேகரன். சோ 2007 "கல்வியின் நவீன செல்நெறிகள்" குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
5. "இலங்கை ஆசிரியர் சேவையின் செயலாற்றுகைத் தரங்கணிப்புப் பற்றிய அறிவுறுத்தற் கைநூல்" 2000 கல்வி உயர்கல்வி அமைச்சு, பத்தரமுல்ல.
6. Rudd.P, Reed.F and Smith.P, 2008, The Effects of the School Environment on Young People's Attitudes to Education and Learning. Slough: NFER


# IMPACTS OF ADVANCE LEVEL FORMAL EDUCATION SYSTEM BY THE DOMINATION OF PRIVATE TUTION CLASS: THE RESEARCH BASED ON MANMUNAI NORTH AREA, EDUCATIONAL ZONE-BATTICALOA

**Shandru Mariyadas**